செ.வெ.எண்: 997/2017 நாள்: 28.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்கள் தலைமையில் குழு இன்று (28.12.2017) நேரில் ஆய்வு.**

மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்கள் தலைமையில் புதுடெல்லி கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வள ஆணையர் டாக்டர் பி. பால்பாண்டியன், மத்திய மின்துறை துணை இயக்குநர் திரு. ஒ.பி.சுமன், மத்திய கப்பல்துறை அலுவலர் திரு. பரமேஷ்வர் பாலி, மத்திய வேளாண்மை கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல இயக்குநர் டாக்டர் கே. மனோகரன், ஆகியோர்களை கொண்ட மத்திய குழுவினர், இன்று (28.12.2017) கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள்.

பின்னர் மத்திய குழுவினர் முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் கே. சத்தியகோபால் இ.ஆ.ப., முதன்மை செயலர் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய்குமார் இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் கே. கோபால் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு. வி.பி.தண்டபாணி இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு. சமீரன் ஆகியோர்களுடன் மாவட்டத்தில் ஓகி புயலால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் சீரமைப்பு பணிகள் குறித்து கலந்துரையாடல், கொல்லங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஓகி புயல் சீரமைப்பு பணிகள் குறித்து அரசு உயர் அலுவலர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர், முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் கே. சத்தியகோபால் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில், நவம்பர் 30-ம் தேதி அன்று ஏற்பட்ட ஓகி புயலால் பல்வேறு இடங்களில் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்து மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால், மின்கசிவினால் எந்தவொரு உயிர்சேதமும் ஏற்படவில்லை. இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் ஏற்பட்ட சேதங்கள், சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்ய மத்திய குழு மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்களின் தலைமையில் நான்கு பேர் வருகை தந்துள்ளனர். மாவட்டத்தில் சீரமைக்கப்பட்ட மின்கம்பங்கள், மின்மாற்றிகள், சேதமடைந்த நெல், தென்னை, வாழை, இரப்பர் போன்ற

வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர் வகைகளும், சாலை, தேசிய நெடுஞ்சாலை மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் சீரமைப்பு பணிகளை குறித்து டிசம்பர் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு நாட்கள் ஆய்வு செய்ய உள்ளார்கள். மேலும், காணாமல் போன கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த 170 மீனவர்களும், 41 பிற மாவட்ட மீனவர்களும், 9 பிற மாநிலத்தை சார்ந்த மீனவர்கள் என மொத்தம் 220 மீனவர்கள் இதுவரை கரைதிரும்ப வில்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகையினை உயர்த்தி, ரூ.20 இலட்சமாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கும்வகையில், ஒரு குடும்பத்திற்கு தலா ரூ. 5 ஆயிரம் அவர்களது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதுவரை, ஒகி புயலினால் குமரி மாவட்டத்தில் 18 நபர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்களை சீரமைப்பதற்காக ரூ. 475 கோடி தேவைப்படுகிறது. தற்போது, முதல்கட்டமாக ரூ.133 கோடி தேசிய பேரிடர் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் கே. சத்தியகோபால் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, மாவட்ட நிர்வாகம், மின்துறை சார்பாக வைக்கப்பட்டிருந்த, ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் அதன் சீரமைப்பு பணிகளின் புகைப்படங்களையும், பின்னர், கொல்லங்கோடு அரசு மேல்நிலைப்பள்ளியிலும், தூத்தூர் செயின்ட் ஜூட்ஸ் கல்லூரி கூட்டரங்கில் மீன்வளத்துறை சார்பாக வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களையும் மத்திய குழுவினர் பார்வையிட்டார்கள்.

பின்னர், மத்திய குழு மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தூத்தூர் செயின்ட் ஜூட்ஸ் கல்லூரி கூட்டரங்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, வள்ளவிளை பகுதியில் ஏற்பட்ட சேதங்களை பார்வையிட்டு, மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்கள்.

மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்கள், முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் டாக்டர் கே. சத்தியகோபால் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர்களுடன் பெரியகுளம், மருந்துகோட்டை, சுருளோடு ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று, மின் சீரமைக்கப்பட்ட பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மேலும், மத்திய குழுவின் மீன்வள ஆணையர் டாக்டர் பி. பால்பாண்டியன், மத்திய கப்பல்துறை அலுவலர் திரு. பரமேஷ்வர் பாலி ஆகியோர்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் கே. கோபால் இ.ஆ.ப., அவர்கள், மீன்வளத்துறை இயக்குநர் திரு. வி.பி.தண்டபாணி இ.ஆ.ப., மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர்

திரு. சமீரன் ஆகியோர்களுடன் சென்று நீரோடி, மார்த்தாண்டன்துறை, இரவிபுத்தன்துறை, சின்னத்துறை, தூத்தூர், பூத்துறை மற்றும் இரையுமன்துறை ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று, ஒகி புயலினால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் மீனவர்களின் குறைகளை கேட்டறிந்தார்கள்.

மத்திய வேளாண்மை கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல இயக்குநர் டாக்டர் கே. மனோகரன் அவர்கள், வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்களுடன் நேரில் சென்று கல்படிஏலா, சித்திரங்கோடு, சுருளோடு, ஈசாந்திமங்கலம் ஆகிய பகுதிகளில் உள்ள வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர் சேதங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மத்திய மின்துறை துணை இயக்குநர் திரு. ஒ.பி.சுமன் அவர்கள், மருந்துகோட்டை, சித்திரங்கோடு, வலியாற்றுமுகம், சுருளோடு, கீரிப்பாறை ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று, மின் சீரமைக்கப்பட்ட பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், ஒகி புயல் குறித்த கோரிக்கை மனுக்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து, மத்திய குழுவின் தலைவர் மத்திய உள்துறை இணை செயலாளர் திரு. சஞ்சீவ் குமார் ஜிந்தால் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் பெற்றுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மா.துரை, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு. இராஜகோபால் சுன்கரா இ.ஆ.ப., இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. பாண்டியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு. நிஜாமுதீன், நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இரா.ஜானகி, துணை இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. லேமக் ஜெயக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.